**ஜூலை - 5**

**"எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாய் இருக்கிறோம்." - 2கொரி 10 : 4, 5**

தேவனுடைய வார்த்தைக்கு பக்தியுள்ள கீழ்ப்படிதலும், அவருக்காகவுள்ள நம்முடைய அன்பிற்கும் விசுவாசத்திற்கும் சான்றை நாம் வெளிப்படுத்துதலும், தேவனால் நாம் அங்கீகரிக்கப்படுவதற்குரிய முதல் நிபந்தனை என்பதை நாம் ஞாபகத்தில் வைப்போமாக. தேவனுடைய வழிகளில் நடக்க நாடிக்கொண்டிருக்கிற, உண்மையாகவும், மனப்பூர்வமாகவும் பிரதிஷ்டை செய்திருக்கிற அவருடைய பிள்ளைகள் சார்பாக, பாடுபடவும் மரிக்கவும் தயாராக இருக்கிற, சகோதரருக்காகவுள்ள நமது அன்பே அவர் நம்மில் எதிர்பார்க்கின்ற இரண்டாவது யோக்கியதாம்சமாகும். **- Z '99, 11 (R 2413)**

நம்முடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அவைகளுக்கு மாறானவைகளாயிருக்கின்றன. அவைகள் நமது தேவனின் ஆவியும் வார்த்தையுமே. ஆனபோதிலும், நம்மிலுள்ள தீமையின் கோட்டைகளை நீர்முலமாக்கவும், மனக்கற்பனைகளையும், ஒவ்வொரு பெருமையை உண்டுபண்ணும் காரியத்தையும் வேருடன் பிடுங்கி எறியவும், நமது குணங்களையும், எண்ணங்களையும், உத்தேசங்களையும், வார்த்தைகளையும், செயல்களையும் நமது தலையும் கிறிஸ்துவுமாகிய அவருக்கு உட்படுத்துவதற்கு சாத்தியமாக்கவும், இவைகள் போதுமானவைகளாயிருக்கின்றன. நம்முடைய போராயுதங்கள் சக்தி வாய்ந்தவைகளாயிருக்கின்றன என்று இது நிரூபிக்கிறது. **- P '34, 95.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**எபே 6:12-18; 1தெச 5:8; 1தீமோ 1:18; 6:12; 2தீமோ 2:3; 4:7; 1கொரி 2:4;2கொரி 6:7; 13:3,4; 1கொரி 1:19.**

**கோபுர வாசிப்பு : Z '16, 131 (R 5889).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் கிறிஸ்தவப் போரில் நான் செய்தது என்ன? எப்படி? ஏன்? பலாபலன் என்ன?**